**SET-4**

**Series BVM/C**

**Code No. 6**

Roll No. | | | | | | | |

Candidates must write the Code on the title page of the answer-book.

- இந்த வினாத்தாளில் அச்சிடப்பெற்ற **8** பக்கங்கள் உள்ளதைச் சரிபார்க்கவும்.
- வினாத்தாளின் வலதுபக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ள குறி எண்ணை (Code No.) விடைத்தாளின் தலைப்புப் பக்கத்தில் எழுதவும்.
- இந்த வினாத்தாளில் **9** வினாக்கள் உள்ளனவா எனச் சரிபார்க்கவும்.
- **எழுதத் தொடங்குவதற்கும் முன் வரிசை எண்ணைக் குறிப்பிடவும்.**
- வினாத்தாளைப் படிப்பதற்கு 15 நிமிடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. வினாத்தாள் 10.15 க்குக் கொடுக்கப்படும். 10.15 இல் இருந்து 10.30 வரை வினாத்தாளை மட்டும் படிக்க வேண்டும். இந்த நேரத்தில் விடைத்தாளில் எந்தப் பதிலையும் எழுதக்கூடாது.
- Please check that this question paper contains **8** printed pages.
- Code number given on the right hand side of the question paper should be written on the title page of the answer-book by the candidate.
- Please check that this question paper contains **9** questions.
- **Please write down the Serial Number of the question before attempting it.**
- 15 minute time has been allotted to read this question paper. The question paper will be distributed at 10.15 a.m. From 10.15 a.m. to 10.30 a.m., the students will read the question paper only and will not write any answer on the answer-book during this period.

# தமிழ்

# TAMIL

*கால அளவு : 3 மணி* | *மொ. மதிப்பெண்கள் : 100*

*Time allowed : 3 hours* | *Maximum Marks : 100*



collegedunia
India's largest Student Review Platform

## பகுதி அ (*50 மதிப்பெண்கள்*)

**1.** (அ) கீழ்வருவனவற்றுள் எவையேனும் **ஐந்து** தொடர்களில் உள்ள பிழைகளைத் திருத்தி எழுதுக : *1×5=5*

(i) களயத்தில் இகுந்த பால் முறிந்துவிட்டது.

(ii) வலிமண்டலத்தில் ஏற்பட்டுள்ள மேலடுக்குச் சுளற்சி காரணமாக மழைபெய்யும்.

(iii) ஆற்றில் வெள்ளம் கறைபுரண்டு ஓடுகிறது.

(iv) காலை எலுந்தவுடன் பள்துலக்கு.

(v) குலத்தில் தாமறைப்பூ பூத்துள்ளது.

(vi) அரும்பு மளர்ந்து மனம் வீசியது.

(vii) என் காது தோட்டில் இருந்த திருகானி தொலைந்துவிட்டது.

(ஆ) கீழ்வருவனவற்றுள் எவையேனும் **ஐந்து** தொடர்களை வல்லின மெய்யிட்டுத் திருத்துக : *1×5=5*

(i) பல்லவர் காலத்து சிற்பங்களை கண்டு களித்தேன்.

(ii) வட்டிக்கு கடன்வாங்கிய பணத்தைப் போய் திருப்பி கொடு.

(iii) அந்த மரபெட்டியின் சாவி என் கருப்பு சட்டையில் உள்ளது.

(iv) அந்த கோவிலுக்கு அவன் எப்படி சென்றான் ?

(v) பாவை பச்சை பட்டுடுத்தி கடைக்கு சென்று வந்தாள்.

(vi) களிற்றுக்கு தந்தம் அழகு; கவிதைக்கு சந்தம் அழகு.

(vii) தேசிய கொடியை தெய்வம் எனப் போற்றுவோம்.



collegedunia.com India's largest Student Review Platform

(இ) கீழ்வருவனவற்றுள் எவையேனும் **ஐந்து** தொடர்களைக் கூறியவாறு மாற்றி எழுதுக : *1×5=5*

(i) பெருமழை பெய்து நீர் பெருக்கெடுத்தோடியதால் வைகையில் வெள்ளம் வந்தது. - தொடர் வாக்கியமாக மாற்றுக.

(ii) கந்தன் பந்தை உதைத்தான். - செயப்பாட்டு வினையாக மாற்றுக.

(iii) வளவன் பரிசு பெற்றான். - பொருள் மாறாமல் எதிர்மறை வாக்கியமாக மாற்றுக.

(iv) என்னை எவரும் அறியார். - உடன்பாட்டு வினை வாக்கியமாக மாற்றுக.

(v) தான் மறுநாள் வருவதாக வளவன் தந்தையிடம் கூறினான். - நேர்க் கூற்றாக மாற்றுக.

(vi) டிராக்டர் வயலில் இறக்கப்பட்டது - தன்வினையாக்குக.

(vii) கமலம் ஊஞ்சல் ஆடினாள் - பிறவினையாக்குக.

**2.** (அ) பின்வரும் பத்தியைப் படித்து அதன் அடியிற்காணும் வினாக்களுக்கு விடையளிக்க : *2×5=10*

கடலின் அடியில் மலைத்தொடர்கள், பள்ளத்தாக்குகள், குன்றுகள் உண்டு. ஆழ்கடல் என்பது இருட்டாக இருக்கும். சுமார் 30 மீட்டர் ஆழம் வரை சூரிய ஒளி ஊடுருவமுடியும். அதற்கு கீழ் இருட்டாகவே இருக்கும். கடலின் சராசரி ஆழம் 4கி.மீட்டர். ஆனால் வடக்கு பசிபிக் பெருங்கடலில் மரியானா தீவுக்கு அருகில். மிகவும் ஆழமான பெரிய அளவில் பள்ளம் அல்லது அகழி உள்ளது. அந்த இடத்தில் கடலின் ஆழம் 10924 மீட்டர்கள். அதாவது


collegedunia.com India's largest Student Review Platform

35840 அடிகள் என்று அளவிடப்பட்டுள்ளது. இந்தப் பள்ளம் அல்லது அகழியானது 2550 கி.மீட்டர் நீளமும் சராசரியாக 69 கி.மீட்டர் அகலமும் கொண்டது. பசிபிக் நிலத்தகடும், மரியானா நலத்தகடும் சந்திக்கும் இடத்தில் அகழியின் அடிப்பகுதியில் ஒரு மடு உள்ளது. அந்த மடுவின் ஆழம் 11034 மீட்டர் ஆகும். அந்த மடுவிற்குப் பெயர் 'சேலஞ்சர் மடு' என்பதாகும். பிரிட்டிஷ் கப்பலான 'சேலஞ்சர்' 1951-ஆம் ஆண்டில் மரியானா அகழியின் ஆழத்தை அளவிட்டது. மிக ஆழமான இந்தப் பள்ளத்திற்கு கப்பலின் பெயரால் "Challenger Deep" எனப் பெயரிடப்பட்டது.

மனிதர்கள் அதிகம் பயணிக்காத இடம் ஆழ்கடல்தான். விண்வெளிப் பயணத்தைவிட மிகக் கடினமானது ஆழ்கடல் பயணம்தான். காரணம் ஆழ்கடலில் நீரின் அழுத்தம் அதிகம். மரியானா அகழியின் அடிப்பகுதி வரை முதன் முதலில் சென்று வந்தவர்கள் டொன் வால்ஷ் என்ற அமெரிக்க கடற்படை வீரரும், சாக்கஸ் பிக்கார்டு என்ற சுவிடர்சர்லாந்து நாட்டைச் சேர்ந்த கடல்சார் வல்லுநரும் ஆவர். பின்னர் 2012-ல் ஜேம்ஸ் கேமரன் என்பவர் தனிமனிதராக யாருடைய துணையுமில்லாமல் இவ்வகழியின் அடிப்பகுதிக்குச் சென்று வந்தார். உலகளவில் பிரபலமான 'தி.டெர்மினேட்டர்', 'டெர்மினேட்டர்-2', 'ஏலியன்ஸ்', 'டைட்டானிக்' போன்ற படங்களை உருவாக்கியவரும் இவரே ஆவார்.



collegedunia.com
India's largest Student Review Platform

**வினாக்கள் :**

(i) சேலஞ்சர்மடு எவ்வளவு மீட்டர் ஆழம்கொண்டது ? இம்மடுவிற்கு அப்பெயர் வரக் காரணம் என்ன ? *2*

(ii) மரியானா அகழியின் அடிப்பகுதிவரை முதன்முதலில் சென்றவர்கள் யார் ? யார் ? அவர்கள் எந்நாட்டைச் சேர்ந்தவர்கள் ? *2*

(iii) தனிமனிதனாக மரியானா அகழிக்குச் சென்றவர் யார் ? எப்போது ? *2*

(iv) கடல் பகுதியில் உள்ள எப்பகுதியைச் ‘சேலஞ்சர் மடு’ என அழைக்கின்றனர் ? *2*

(v) விண்வெளிப் பயணத்தைவிட மிகக் கடினமான பயணம் எது ? ஏன் ? *2*

(ஆ) தேசிய விருதுப் பெற்ற தபால்காரர் ஒருவரை நேர்காணல் செய்க. *5*

**அல்லது**

பின்வரும் செய்யுளின் அடியிற்காணும் வினாக்களுக்கு விடையளிக்க :

நாட்டினிலே குடியரசு நாட்டி விட்டோம். இந்நாள்
நல்ல பல சட்டங்கள் அமைத்திடுதல் வேண்டும்.
காட்டோமே சாதிமணம் ! கலப்பு மணம் ஒன்றே
நல்வழிக்குக் கைகாட்டி ! கட்டாயக் கல்வி
ஊட்டிடுவோம் முதியோர்க்கும் மாணவர்க்கும் நன்றே;
உழையானை நோயாளி ஊர்திருடி என்போம்;
கேட்டை இனி விலைகொடுத்து வாங்கோமே; சாதி
கீழ்மேல் என்றுரைப்பவர்கள் வாழ்வது சிறையே !



collegedunia India's largest Student Review Platform

**வினாக்கள் :**

(i) இப்பாடலில் ஆசிரியர் இந்நாள் என எந்நாளை குறிப்பிடுகின்றார் ? *1*

(ii) நல்வழிக்கொரு கைகாட்டி எது ? *1*

(iii) கட்டாயக் கல்வியை யார் யாருக்குக் கொடுக்க வேண்டும் ? *1*

(iv) உழையானை எப்படி அழைக்க வேண்டும் என்கிறார் ? *1*

(v) சிறையில் வாழ வேண்டியவர்கள் யார் ? *1*

**3.** கீழ்வரும் தலைப்புகளில் **ஒன்று** பற்றிக் கட்டுரை வரைக : *10*

(i) கண் தானமும் இரத்த தானமும்

(ii) மின்னணுக் கழிவுகள்

(iii) காடுகளும் அதன் பயன்களும்

**4.** பின்வரும் தலைப்புகளில் **ஒன்று** பற்றிக் கடிதம் வரைக : *10*

(i) ஏதேனும் அறக்கட்டளைக்கு உனது மேற்படிப்புக்கு நிதி உதவி செய்யுமாறு விண்ணப்பம் ஒன்று வரைக.

(ii) பள்ளி விளையாட்டுப் போட்டியில் உடல் நலக் குறைவால் வெற்றி பெறாமல் தோல்வி கண்ட நண்பனுக்கு ஆறுதல் கூறி கடிதம் ஒன்று வரைக.

*(எக்கடிதமாயினும் உம் முகவரி;*
*அ. பூங்குன்றன்/பூங்குழலி 68. தென்றல் குடியிருப்பு, அறிஞர் அண்ணாதுரை பிரதானசாலை, காஞ்சிபுரம் - 631501. எனக்கொள்க.)*



collegedunia.com
India's largest Student Review Platform

## பகுதி ஆ *(50 மதிப்பெண்கள்)*

**5.** கீழ்வரும் வினாக்களில் எவையேனும் **இரண்டனுக்கு** விடையளிக்க : *10×2=20*

(i) இராமலிங்க அடிகளாரின் சமரச உணர்விற்கு எடுத்துக்காட்டாக உங்கள் பாடப்பகுதியில் வரும் கருத்துகளைத் தொகுத்து வரைக.

(ii) கவிதையைப் பற்றி பவணந்தி முனிவரும் கம்பரும் கூறும் கருத்துகளைத் தொகுத்து வரைக.

(iii) பழந்தமிழ் மக்கள் மேற்கொண்ட தொழில்களைப்பற்றியும், நம் முன்னோர்கள் நனிநாகரீகராய் விளங்கியமை பற்றியும் இளவழகனார் கூறுவன யாவை ?

(iv) வயிற்றுப் பெருமான் பொருட்டு மக்கள் செய்யும் செயல்களாக அறநெறிச்சாரம் கூறுவன யாவை ?

**6.** கீழ்வரும் செய்யுளின் அடியிற்காணும் வினாக்களுக்கு விடையளிக்க : *5*

'நல்லது செய்த லாற்றீ ராயினும்
அல்லது செய்த லோம்புமின்'

(i) இவ்வரிகள் இடம்பெற்றுள்ள நூல் எது ? ஆசிரியர் யார் ? *2*

(ii) இப்பாடலின் திணை துறைகளை எடுத்தெழுது. *2*

(iii) 'ஓம்புமின்' – என்று யாரைப் பார்த்துக் கூறுகின்றார் ? *1*

**அல்லது**

"நண்ணு பருவத்திலே முதல் / மிளமைப்
நாவை யசைத்த மொழி - எங்கள்
கண்ணைத் திறந்துல கத்தை விளக்கிக்
கருத்தோ டிசைத்த மொழி"



collegedunia India's largest Student Review Platform

(i) இப்பாடல் எந்நூலிலிருந்து எடுக்கப்பட்டது ? ஆசிரியர் யார் ? *2*

(ii) நாவையசைத்த மொழி எது ? 'நண்ணும்' - பொருள் தருக. *2*

(iii) இப்பாடல் உம் பாடப்பகுதியில் எப்பகுதியில் வந்துள்ளது ? *1*

**7.** கீழ்வரும் வினாக்களில் எவையேனும் **இரண்டனுக்கு** விடையளிக்க : *5×2=10*

(i) 'பொறையுடைமை' - என்னும் அதிகாரத்தின் கீழ் வள்ளுவர் உணர்த்தும் கருத்துகளை எடுத்தெழுதுக.

(ii) கண்ணகியின் சூளுரையும் நகரமாந்தர் மயங்கிக் கூறியனவும் யாவை ?

(iii) வினைமுற்றிய தலைவன் தேர்ப்பாகற்குச் சொல்லியதை விளக்கி வரைக.

(iv) அன்னத்தைப் பார்த்து, வேலன் உரைத்த உரைகளை எடுத்தெழுதுக.

**8.** 'பால்வண்ணம் பிள்ளை' – இக்கதையின் கருப்பொருளும் சுவையும் சிதையாமல் சுருக்கி வரைக. *10*

**அல்லது**

'வேலி' – இக்கதையைப் பற்றிய உன் விமர்சனத்தை ஒரு கட்டுரையாக வரைக.

**9.** பூந்தோட்டச் சாமியின் பண்பு நலன்களை எடுத்தெழுதுக. *5*

**அல்லது**

'மகன்' - என்ற கதை மூலம் ஆசிரியர் உணர்த்த வந்த கருத்துகளை எடுத்தெழுதுக.



collegedunia.com
India's largest Student Review Platform